


"இன்னொருக்கா ஆசைகாட்டி மோசம் செய்யப் பிளான் பண்ணுறார் கண்டியளோ"

Registered as a Newspaper
பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 261
செவ்வாய்க்கிழமை
13 ஓகஸ்ட் 2024
ஆடி 28 ஆம் நாள்
2055

## நீதி அமைச்சராக மீளவும் அலிசப்ரி

கொழும்பு, ஓக. 13
வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மீண்டும் நீதி அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் நேற்றுப் பதவியேற்றார்.
நீதி அமைச்சராகப் பதவி வகித்துவந்த விஜயதாஸ அண்மையில் அந்தப் பதவியில் இருந்து விலகியிருந்தார். இதையடுத்து, அந்த அமைச்சு ஜனாதிபதியின் 11

# புதிய நாடாளுமன்றில் சமஷ்டிப் பேச்சுகள்!



### ரெலோ, புளொட், போராளிகள் கட்சி பிரதிநிதிகளிடம் ரணில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 13
ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு புதிய அரசாங்கம் அமைந்த பின்னர் சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு தொடர்பில் எல்லோரும் பேசி முடிவுக்கு வருவோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்துள்ளார். 11

ஜனாதிபதித் தேர்தல்

## 32 வேட்பாளர்கள் கட்டுப்பணம்!

கொழும்பு, ஓக. 13
ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இதுவரை 32 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இதன்படி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் சார்பில் போட்டியிட 16 வேட்பாளர்களும், வேறு அரசியல் கட்சிகள் சார்பில் போட்டியிட 11

சமூக நீதிக்கான ஆணைக்குழுவில்

## தமிழர் பிரச்சினை ஆராயப்படுமாம்!

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 13
அரசாங்கத்தால் புதிதாக உருவாக்கப்படவுள்ள சமூக மற்றும் நீதிக்கான ஆணைக்குழுவில் தமிழ் மக்களின் சமூகப் பிரச்சினைகளை விரிவாக ஆராய்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நுவரெலியா மாவட்ட கல்விசார் நிபுணர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று 11



## ஒற்றையாட்சியே எங்களின் ஆட்சி

### அதிகாரங்கள் பகிரப்படாது பெரமுன ஆணித்தரம்

யாழ்ப்பாணம், ஓக. 13
ஒற்றையாட்சிக்குள் அனைத்து இன மக்களும் சமமாக வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதே எமது நோக்கமாகும். பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்படமாட்டாது, 'ஒரே நாடு: ஒரே சட்டம்' என்பதே எமது கொள்கை - என்று பொதுஜன பெரமுன அறிவித்துள்ளது. 11

## மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக. 13
வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் சில வாரங்களாக மண்ணெண்ணெய்க்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது என்றும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே 11

## காங்கேசன் – நாகப்பட்டினம் கப்பற்சேவை மீண்டும் தாமதம்

யாழ்ப்பாணம், ஓக. 13
இந்தியாவின் தமிழகம் நாகப்பட்டினத்துக்கும் யாழ்ப்பாணம் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பற்சேவையை ஆரம்பிப்பதில் மீண்டும் 11

காங்கேசன்துறையில்

## ரயில் இயந்திரத்தில் பெருமளவு டீசல் திருட்டு!

### தொடர்ச்சியாக நடந்ததா? விசாரணைகள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 13
யாழ்ப்பாணம் - காங்கேசன்துறையில் ரயில்கள் தரித்து நிற்கும்போது அவற்றின் இயந்திரங்களில் இருந்து பெருமளவு டீசல் தொடர்ச்சியாகத் திருடப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
காங்கேசன்துறை ரயில் நிலையத்தில் கடந்த 9 ஆம் திகதி இரவு ரயிலொன்று தரித்து நின்றபோது, 11



## கேரளக் கஞ்சாவுடன் இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், ஓக. 13
யாழ்ப்பாணம் - அரியாலைப் பகுதியில் பெருந்தொகை கேரளக் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 156 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.
இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, மன்னார் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகள் மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கையின்போதே மேற்படி கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. 11

யானை, கை போன்று

## தமிழ்க்கட்சிகளின் சின்னங்களும் காணாமற்போகும் நிலைவரும்

### ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 13
தென்னிலங்கையின் பழம்பெரும் அரசியல் கட்சிகள் இந்த ஜனாதிபதித் தேர்தலில் காணாமற்போனதுபோல, தமிழர் பரப்பிலும் கட்சிகளின் சின்னங்கள் காணாமற்போகும் நிலை வரும். ஆதலால், தூயதமிழ்த் தேசியவாதிகளும், இளையோரும் புதிய அரசியல் கூட்டமைப்பாக உருவெடுக்கவேண்டும் என்று ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.
இதுதொடர்பாக ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் 11

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதித் தேர்தலில் சர்வதேச கண்காணிப்பு

கொழும்பு, ஓக. 13
சிறிலங்கா ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்காக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாய நாடுகளின் கண்காணிப்பாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
இந்த விடயத்தை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (ச-இ)

# தேர்தல் சட்ட விதிமீறல்கள் கண்டறிய தனிக்குழுக்கள்

## நியமித்தது தேர்தல்கள் ஆணைக்குழு



**யாழ்ப்பாணம், ஓக. 13**
**அரச சொத்துகள் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றதா? என ஆராய்ந்து அவ்வாறான சட்ட விரோதச் செயற்பாடுகள் இடம்பெறும் நிறுவனங்களின் தலைவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்கு தனியான குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.**

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.
அரச சொத்துகளைத் தேர்தல் நோக்கத்துக்காகப் பயன்படுத்தியமை தொடர்பில் ஆணைக்குழுவுக்கு ஏற்கனவே நூற்றுக்கணக்கான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.
அவை சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கு இடையூறாக இருப்பதனால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
அதேவேளை தேர்தல் வன்முறைகள் அதிகம் இடம்பெறும் என நம்பப்படும் பகுதிகளுக்கு விசேட பாதுகாப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## தேர்தல் நிதியை வழங்கத் தயார்

### நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 13
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காக தற்போது மதிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதற்குத் தயாராகவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.
கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்தனர்.
கடந்த மாதம் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டு, இதுவரையான காலப்பகுதியில் 29 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக அறியமுடிகிறது.
இந்தநிலையில், தேர்தலுக்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதற்குத் தயாராகவுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## ஜனாதிபதித் தேர்தல் 337 முறைப்பாடுகள்

கொழும்பு, ஓக.13
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரையில் 337 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்தில் 220 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்தில் 117 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.
அதேநேரம் நேற்று மாத்திரம் 33 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ச-இ)



## பெரமுனக் கட்சி தலைதூக்காது

### அக்கட்சி எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 13
பொதுஜன பெரமுனவை இனி எவராலும் கட்டியெழுப்பமுடியாது. எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெறவேண்டும். ஏனெனில் அவர் வெற்றிபெற்றால்தான் நாடு வெற்றிபெறும் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருந்த வேளையில் தற்போது வீரவசனம் பேசுபவர்கள் எவரும் அரசாங்கத்தை பொறுப்பேற்கவில்லை. நாடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தபோது நிபந்தனை விதித்துக் கொண்டிருந்தார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அரசியல் எதிர்காலத்தை கருத்திற்கொள்ளாமல் நாட்டைப் பொறுப்பேற்றார்.
பொதுஜன பெரமுன வெற்றிபெற்றால் மகிழ்ச்சியடைவேன். ஆனால் அது நடைமுறைக்குச் சாத்தியமற்றது. பொதுஜன பெரமுனவை இனி எவராலும் கட்டியெழுப்பமுடியாது- என்றார். (ச-இ)




## மஹிந்த ராஜபக்சவுடன் சந்தோஷ் ஜா சந்திப்பு

கொழும்பு, ஓக. 13
பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்சவை இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.
கொழும்பிலுள்ள மஹிந்த ராஜபக்சவின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.
இதன்போது தற்போதைய அரசியல் விவகாரங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாகத் தெரியவருகின்றது.
அதேவேளை ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இந்தியத் தூதுவர், மஹிந்த ராஜபக்சவை சந்தித்தமை முக்கியத்துவம் வாய்ந்ததாக அரசியல் கணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## நாட்டை மீட்கும் சவாலை ஏற்பேன்

### அநுரகுமார தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 13
இலங்கையை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதற்குரிய சவாலை ஏற்பதற்கு தேசிய மக்கள் சக்தி தயாராகவே உள்ளது என்று அந்தக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வேட்புமனுவில் கையொப்பமிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இந்த நாட்டைப் பெரும் நெருக்கடிக்குள் ஆட்சியாளர்கள் தள்ளிவிட்டுள்ளனர். நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலானது மிகவும் தீர்க்கமானதொரு தேர்தலாகும். எனவே, இந்த நெருக்கடியிலிருந்து நாட்டையும், மக்களையும் மீட்கும் சவாலை தேசிய மக்கள் சக்தி ஏற்கும்.
இன்று இடப்பட்ட கையொப்பமானது, வெற்றிக்கான ஒப்பந்தமாகும். பலமானதொரு குழு தேசிய மக்கள் சக்தியிடம் உள்ளது. மக்களும் எமது பக்கம் உள்ளனர். எனவே, தேர்தலில் வெற்றி உறுதி என அவர் மேலும் தெரிவித்தார். (ச-25, 44)

# எவரையும் ஆதரிக்கமாட்டேன்

### சந்திரிகா தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 13
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளருக்கும் ஆதரவளிக்கப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.
சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர்கள் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்குமாறு கருத்துத் தெரிவித்த நிலையில், தான் எந்த வேட்பாளருக்கும் ஆதரவளிக்கப்போவதில்லை என்றும் சுதந்திரக் கட்சி தாம் விரும்பும் வேட்பாளருக்கு ஆதரவளிப்பதில் தனக்கு ஆட்சேபனை இல்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஊரெழு கலைவாணி முன்பள்ளி விளையாட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இதன்போது மாணவர்களின் வினோத உடைப்போட்டி இடம் பெற்றது. (ச)




# நல்லூர்த் திருவிழாவின் 5ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.13


இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

5 ஆம் நாள் நிகழ்வு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் சீடர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டு நாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ( அறநெறிப் பிரிவு ) திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழக சைவ சித்தாந்தத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருச்செல்வம் செல்வமனோகரன் சிறப்பு அதிதியாக அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் செயலாளர் சைவசித்தாந்தபண்டிதர், சைவப்புலவர் செ. த. குமரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

அண்ணமார் அறநெறிப் பாடசாலை, முருகையா தேவஸ்தான அறநெறிப்பாடசாலை, வடலியடைப்புப் பிள்ளையார் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விசேட நிகழ்வாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முதலாம் வருட மாணவி செல்வி சிவானுஜா ஈஸ்வரலிங்கம் அவர்களின் இசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளது. (ச-45,25,159)






# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக.13

எழுத்தாளரும், ஊடகவியலாளருமான சூரன்.ஏ.ரவிவர்மாவின் 'திரைக்கு வராத சங்கதி' நூல் வெளியீட்டு விழா சிரேஷ்ட ஊடகவியலாளர் இ.பாரதியின் தலைமையில் தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. ஜீவநதி, கடல் ஆகிய சஞ்சிகையின் ஆசிரியர் க.பரணீதரன் வெளியீட்டு உரையையும், யாழ்.பல்கலைக் கழக ஊடகக் கற்கைகள் துறை தலைவர் திருமதி பூங்குழலி சிறிசங்கீர்த்தனன் சிறப்புரையையும் நிகழ்த்தினர். முதல் பிரதியை எழுத்தாளரின் சகோதரிகள் பெற்றுக் கொண்டனர். (ச-25 -27)

# கிளி. திரேசா பெண்கள் கல்லூரி வலைப்பந்தாட்டத்தில் முதலிடம்

கிளிநொச்சி, ஓக.13

கிளிநொச்சி மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம் நடத்திய 16 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கிடையிலான அமரர் இ.விக்கினேஸ்வரமூர்த்தி ஞாபகார்த்த வலைப்பந்தாட்டப் போட்டியில் புனித திரேசா பெண்கள் கல்லூரி முதல் இடத்தை தனதாக்கியுள்ளது. இந்தப் போட்டி கிளிநொச்சி பொது விளையாட்டு மைதான உள்ளக அரங்கில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தின் உபதலைவர் சந்தனம் பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்டச் செயலர் எஸ்.முரளீதரன், சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் எம்.மோகனதாஸ், யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி மற்றும் கரைச்சி மற்றும் பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி-113)

## நலம் கோடி தாராய்

வண்ண மயிலேறி வலம் வரும் வேலவனே
நின் கருணை வேண்டினோம் ஐயனே!

நல்லூர்ப்பதி வாழ் நாயகனே
நமக்கெல்லாம் நீதான் காவலனே!

சித்தமெல்லாம் நீங்காது உறைபவனே
தினம் தோறும் வேண்டும் வரம் தருபவனே!

நாடினோம் நாம் நல்லூரான் நின்னிடமே
நலம் கோடி தருவாய் முருகப்பெருமானே!

## வேலவனே!

நல்லை நகர்ப் பதிவாழ் முருகா! - நின்
கடைக்கண் பார்வைதனை ஓர் முறை தாராய்

நின்னைச் சரணடைந்தோம் குமரா !
குறைகள் பல களைந்திடுவாய் என்றே!

எண்ணிய கருமம் ஆற்ற எக்காலமும் - உனை
தொழுது நிற்போம் வேலவனே !

■ அரியாலையூர்
மிஷாந்தி ஜெயசிங்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆன்மீக அருளுரை

யாழ்ப்பாணம், ஓக.13
தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய பெருவிழாவை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தப்பட்டு வரும் சிறப்பு ஆன்மீக நிகழ்வில் நேற்றுத் திங்கட்கிழமை 'மேன்மைகொள் சைவநீதி' எனும் தலைப்பில் ஆசிரியர் த.கருணாகரன் ஆன்மீக அருளுரை நிகழ்த்தினார். (ரி-66)



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் எட்டாம் நாள் திருவிழா, 9ஆம் நாள் திருவிழா என்பன நேற்றுமுன்தினமும் நேற்றும் சிறப்புற இடம்பெற்றன. (ச-26)

## அடிக்கல் நடுகை

யாழ்ப்பாணம், ஓக. 13
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடபகுதிக்கான எரிபொருள் சேமிப்பு நிலையத்தின் புதிய கட்டம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு காங்கேசன் துறையில் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம் பெறவுள்ளது. நிகழ்வில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-25, 9)

## பேருந்தில் சேஷ்டை சந்தேகநபர் கைது!

கொழும்பு, ஓக. 13
யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை தனியார் பேருந்தில் பெண்களுடன் சேஷ்டையில் ஈடுபட்ட நபர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-23)



ஈழத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய கொடியேற்றம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகளவான பக்தர்கள் சூழ சிறப்புற நடைபெற்றது. (ச-45,125,66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எமனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். சகோதரர்கள் மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதரர்களால் அனுகூலம் உண்டா கும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். பிரமுகர் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும்.

**கடகம்:** எதிலும் பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்படவேண்டிய நாள். முக்கியமான முடிவுகள் எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். உறவினர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படும். பணிச்சுமையின் காரணமாக உடல் அசதி ஏற்படும்.

**கன்னி:** தேவையான பணம் இருப்பதால் செலவுகளைச் சமாளித்துவிடுவீர்கள். மனக்கசப்புகள் நீங்கும். சுபச்செலவு ஏற்படும். சகோதரர்களால் சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. மாற்றங்கள் ஏற்படும்.

**துலாம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். பணஉதவி கிடைக்கும். பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. குடும்ப உறுப்பினர்களிடையே உங்கள் மீதான மரியாதை அதிகரிக்கும்.

**விருச்சிகம் :** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியம் இழுபறியாகும். கணவன் மன உறுதியுடன் செயற்படுவீர்கள். தெளிவாகச் சிந்திக்கும் திறன் அதிகரிக்கும்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால்சில சங்கடங்கள் ஏற்படும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புண்டு. பேசும்போது பொறுமை அவசியம்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். பிள்ளைகள் கேட்பதை மகிழ்ச்சியுடன் வாங்கித் தருவீர்கள். உங்கள் முயற்சிக்கு பெற்றோரின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். மனஸ்தாபம் ஏற்படும். பொறுமை அவசியம். ஆஞ்சநேயரை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**மீனம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்கவும். முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உண்டு. திடீர் செலவுகளும் ஏற்படும்.



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவ பெருவிழா ஆரம்பமாகி இடம்பெற்று வரும் நிலையில் திருவிழாக் காலங்களில் தினமும் மாலை வேளை சந்நிதியான் சூழலில் அமைக்கப்பட்டுள்ள தெய்வீக இசையரங்கில் செல்வச்சந்நிதி கலாமன்றத்தின் ஏற்பாட்டில் தினமும் ஆன்மீகம் சார்ந்த நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. (ச-26)

## 'இனிய நந்தவனம்' நூல் வெளியீடு



யாழ்ப்பாணம், ஓக.13
வட மாகாண சிறப்பு இதழான 'இனிய நந்தவனம்' நூல் வெளியீடு முல்லைத்தீவு விஸ்வமடு மத்திய சனசமூக நிலையத்தில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது. சிறப்புப் பிரதியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் ஹாசிம் உமர் வெளியிட்டு வைக்க, அறிவிருட்சம் துரித கல்வி சமூக மேம்பாடு நிறுவன இயக்குநர் ஐ. எம். சுரைஸ் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.
நூலின் அறிமுக உரையை யோ.புரட்சியும், நயப்புரையை [illegible] ஆற்றினார். (ச-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சிவகங்கையாவது சீராக ஓடுமா?

காங்கேசன்துறைக்கும், நாகப்பட்டினத்துக்கும் இடையிலான பயணிகள் படகுச்சேவைக்கென 'சிவகங்கை' என்ற படகு ஈடுபடப்போவதாகவும், அதன் வெள்ளோட்டம் வெற்றிகரமாக நிறைவுக்கு வந்துவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், இந்த சேவை மீண்டும் ஒரு முறை ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு முன்னர் காங்கேசன் - நாகப்பட்டினம் இடையே சேவையில் ஈடுபட்டிருந்த 'செரியாப்பாணி' படகு போல 'சிவகங்கையும்' மாறிவிடக் கூடாது என்பதாகவே மக்களின் எதிர்பார்ப்பு இருந்த நிலையில் இப்போது ஏமாற்றமே மிச்சமாகியிருக்கின்றது.

'கத்திடக் கேட்டிடும் தூரத்தில்' இருக்கும் தமிழகத்துக்குச் செல்வதற்கு, மிகசுலபமானதும், பணச் செலவை மீதப்படுத்துவதுமான மார்க்கமாக கடல்மார்க்கமே சரியான தெரிவாக இருக்கமுடியும். ஆனால் சிலபல காரணங்களால் இந்தக்கடல் இணைப்பை இலங்கை - இந்திய அரசாங்கங்கள் தள்ளிப்போட்டபடியே வந்தன. 'இதோ தொடங்குகின்றது, அதோ தொடங்குகின்றது' என்று ஆளையும் எழுப்பி முயலையும் எழுப்பும் அறிவிப்புகள் மட்டும் வந்துகொண்டிருந்தவே தவிர, உருப்படியான காரியங்கள் எதுவும் நடைபெறவில்லை. ஒவ்வொருமுறையும் படகுப்பயணம் தள்ளிப்போவதற்கு ஏதோவொரு நொண்டிச்சாட்டுச் சொல்லப்பட்டுக்கொண்டே இருந்தது. முறையான அனுமதி பெறப்படவில்லை, படகின் தர நிர்யணம் சோதனை செய்யப்படவில்லை, துறைமுக உட்கட்டமைப்பு வசதி போதாது என்று அந்தச் சாட்டுகள் நீண்டுகொண்டே சென்றன. ஆனாலும் சாட்டுகளைச் சொல்லிச் சமாளிக்கமுடியாத கட்டத்தில் ஒருவழியாக , 'செரியாப்பாணி' என்ற படகு காங்கேசனுக்கும் நாகப்பட்டினத்துக்கும் இடையே தனது பயணத்தை தொடங்கியது. இந்தப் படகுப் பயணச்சேவையை இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி காணொலி மூலம் ஆரம்பித்து வைத்திருந்தார். இலங்கைக்கு இராமன் கல்லால் அணை கட்டியதைப்போல செரியாப்பாணி படகுச்சேவையும் இருநாடுகளையும் பொருளாதார, கலாசார , பண்பாட்டு ரீதியாக இணைக்கப்போகின்றது என்று 'கம்பி கட்டிய கதையெல்லாம்' இந்தியப்பிரதமர் அந்த ஆரம்ப வைபவக் காணொலியில் சொல்லத் தவறவில்லை. ஆனால் அந்தப் படகுச் சேவைக்கும் சொற்ப ஆயுசு போலும். சில தடவைகள் காங்கேசனுக்கும் நாகப்பட்டினத்துக்கும் இடையே உலவித் திரிந்த 'செரியாப்பாணிக்கு' மாரிமழை ஒத்துவராது என்றும், மழைக்காலம் முடிந்ததும் மீண்டும் கடலில் தடம் பதிக்கும் என்றும் சொல்லி தற்காலிகமாக அந்தச் சேவைக்கு மூடுவிழா செய்யப்பட்டது.

மாரிமழை ஓய்ந்து அடுத்தமாரியும் நெருங்கப் போகின்றது. ஆனால் செரியாப்பாணி கடலுக்குள் வரவேயில்லை. இதற்கிடையே இன்னொரு நிறுவனம், இந்தப் படகுச் சேவையைப் பொறுப்பெடுத்தது. சில மாதங்களுக்கு முன்னர் தங்கள் சேவை ஆரம்பமாகின்றது என நாளும் குறித்தார்கள். ஆனால் படகுச்சேவைக்கான பழைய சாபக்கேடு இந்த நிறுவனத்தையும் தொற்றிக்கொண்டது. புதிய படகைக் கடலில் இறக்குவதிலும் ஏதேதோ தடங்கல்கள். அதனால் தடைப்பட்டு, தடைப்பட்டு, ஒரு வழியாக சிவகங்கை என்ற படகு தன் வெள்ளோட்டத்தை முடித்து, பயணிகள் சேவைக்கு தயாராகியிருந்தது. இவ்வாறான பின்னணியிலேயே சிவகங்கையும் தள்ளிப் போயிருக்கிறது.

சிக்கல் என்னவெனில், சிவகங்கையில் பயணம் பிற்போடப்பட்டமை தற்காலிகமானதா? அல்லது தற்காலிகம் என்ற போர்வையில் செய்யப்படவுள்ள இழுத்தடிப்பு நாடகமா? என்பதே. ஏனெனில் செரியாப்பாணியை ஒத்த அதே வசதிகளுடன் தான் சிவகங்கையும் உள்ளதால், அடுத்தடுத்த மாதங்களில் ஆரம்பமாகப்போகும் மாரி காலத்துக்கு இந்தப் படகுச் சேவையும் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படுவதற்கான சாத்தியங்களே அதிகம்.

படகுச்சேவை மூலம் தமிழகத்துக்கும், வடக்குக்கும் இடையிலான கடல்பாதை இறுக்கமடைந்தால் பல நன்மைகள் விளையும். வடக்குக்கு மட்டுமல்லாது, தமிழகத்துக்கும், இந்தியாவுக்கும் நன்மைகள் அதிகமுண்டு. அதை மனதில் கொள்ளவேண்டியது அனைவரினதும் பொறுப்பு.



# சஜித் விடுத்த அழைப்பை நிராகரித்த பொதுக்கட்டமைப்பு

**யாழ்ப்பாணம், ஓக.13**

**ஜனாதிபதி வேட்பாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்புடன் சந்திப்பு நடத்தக் கோரிக்கை விடுத்துள்ளபோதும் அதை தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு நிராகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.**

சஜித் தரப்பில் இருந்து தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்புக்கு தொலைபேசி ஊடாக இந்த அழைப்பு விடுக்கப்பட்டது என்றும், ஆயினும் அந்த அழைப்பை தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு நிராகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு கட்டுப்பணம் செலுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், ஓக.13
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளராகப் போட்டியிடவுள்ள பா.அரியநேந்திரனுக்கான கட்டுப்பணம் நேற்றுச் செலுத்தப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்கினேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியின் மத்திய குழு உறுப்பினரான த.சிற்பரன் பொதுவேட்பாளருக்கான கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளார். (எ-66)

## முற்போக்கு எம்.பி. ரணிலுக்கு ஆதரவு?

கொழும்பு, ஓக. 13
தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினரொருவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வுக்கு ஆதரவு வழங்கத் தயாராகிவருகின்றார் என அறியமுடிகின்றது.
ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதற்கு தமிழ் முற்போக்குக் கூட்டணி நேற்று புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.
அந்த நிகழ்வில்கூட குறித்த எம்.பி. பங்கேற்கவில்லை எனத் தெரியவருகின்றது. தனது ஆதரவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவர் வெளிப்படுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ச-44)



## 'யுக்திய' 729 பேர் கைது

கொழும்பு ஓக.13
நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் மேற்கொள்ளப்பட்ட 'யுக்திய' சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 729 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கைதானவர்களில் 710 ஆண்களும் 19 பெண்களும் அடங்குகின்றனர் (ச-இ)

## 4 நாள்களில் 26,889 சுற்றுலாவிகள்

கொழும்பு, ஓக. 13
இந்த மாதத்தின் முதல் 4 நாள்களில் மாத்திரம் 26,889 சுற்றுலாப் பயணிகள்நாட்டுக்குவருகை தந்துள்ளனர்.
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட தரவுகளுக்கமைய, இந்தியாவிலிருந்தே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.
அத்துடன், இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில், 12 இலட்சத்து 24,948 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர். இந்தியா, ரஷ்யா, பிரித்தானியா, ஜேர்மன், சீனா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ச-இ)

**நாளை**

14.08.2024

புதன்கிழமை - ஆடி - 29

சுபநேரம் : 04.35 - 06.05

ராகுகாலம் : 12.05 - 01.35

**நாளொரு நல்வார்த்தை**

செயல்கள் சில நேரங்களில் மகிழ்ச்சியைக் கொடுக்காது. ஆனால் செயலின்றி மகிழ்ச்சியில்லை.

-டிஸ்ரேலி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
18
•
03
•
1935

விண்ணில்
06
•
08
•
2022

அமரர் ஞானலக்ஷ்மி நவரெத்தினம்

**(முன்னாள் வயலின் ஆசிரியை, உடுவில் மகளிர் கல்லூரி)**

திதி: 13.08.2024

அன்பாய் அரவணைத்து
கண்போல் எமைக் காத்து
விண்மேல் ஏகிய
எம் குலவிளக்கே...
மண் மேல் உம் வாழ்வு
மரணத்தில் முடியவில்லை.
விண் மேல் சென் றிரண்டு
ஆண்டுக ளான போதும்
கண்முன்னே நிற்கிறது
உங்கள் முகம் என்றென்றும்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**


**போக்காலை வீதி,**
**உடுப்பிட்டி.**

குடும்பத்தினர்
**தி.நவரெத்தினம் (மெம்பர்)**
**077 6699 166**

# நாய்களுக்கு இன்று கருத்தடை சிகிச்சை

வலிகாமம் வடக்குப் பிரதேசசபை மற்றும் தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை ஆகியவற்றால் முன்னெடுக்கப்படும் நாய்களுக்கான இலவசக் கருத்தடைச் சத்திர சிகிச்சை மற்றும் வளர்ப்பு நாய்களுக்கான பதிவு இன்று செவ்வாய்க்கிழமை காங்கேசன் துறைப் பொதுச்சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பட்டிக்கடவை சனசமூக நிலையத்துக்கு அருகாமையில், மாவிட்டபுரம் கிளினிக் சென்ரர் அருகாமையில், மாவிட்டபுரம் வாளித் தொழிற்சாலைக்கு அருகாமையில், மாவிட்டபுரம் கிராம அலுவலர் அலுவலகத்துக்கு அருகாமையில் ஆகிய இடங்களில் பொதுமக்கள் குறித்த சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–66)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
01
•
10
•
1941

மறைவு
14
•
07
•
2024

கடந்த 14.07.2024 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் வைரமுத்து தவரத்தினம்

**(ஓய்வு நிலை உதவி முகாமையாளர், மக்கள் வங்கி)**

அவர்களின் சபிண்டீகரண கிரியைகள் இன்று (13.08.2024) செவ்வாய்க்கிழமை நடைபெற்று, ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு ஆறுதல்களை நேரிலும், தொலைபேசியூடாகவும் தெரிவித்தவர்கள், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்கள், மலர் வளையங்கள், பதாகைகள், துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டவர்கள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.** **குடும்பத்தினர்.**

(CS 1125)A-1

# மரண அறிவித்தல்



## நடேசபிள்ளை சரஸ்வதியாம்பாள்

மீசாலை வடக்கு கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் எழுதுமட்டுவாழ் தெற்கு விழுபளையை வசிப்பிடமாகவும் தட்டாங்குளவீதி மீசாலை வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நடேசபிள்ளை சரஸ்வதியாம்பாள் (11.08.2024) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், தம்பிஐயா -பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நடேசபிள்ளையின் அன்பு மனைவியும், யசோதா, யஜீந்தன் (ஆசிரியர் யா/மிருசுவில் றோ.க.த.க பாடசாலை), யசிதரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இரத்தினசிங்கம், சிவகொங்கா, டனோஜா, ஆகியோரின் அன்பு மாமியாரும், லக்ஷணன், காலஞ்சென்ற லஜிந்தன், லஜித்திரன், லலிதன், காலஞ்சென்ற லகிர்தா, சஸ்வின், மேகவி, தூளிகா, ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அருந்ததிச் செல்வம், சிவசுந்தரலிங்கம், திலகராணி, காலஞ்சென்ற பரலோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம், செல்லம்மா, மாரியம்மா, சிவபாக்கியம் மற்றும் தங்கராசா காலஞ்சென்றவர்களான கதிரவேற்பிள்ளை, சுப்பிரமணியம் மற்றும் சிவராமலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (14.8.2024) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மந்துவில் மேற்கு இலுவன் இந்து மயானத்திற்கு எடுத்துச் சொல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 736 7278**

(CS 42925) V-1

# மரண அறிவித்தல்



## இராசலட்சுமி தருமராஜா

**(பெரிய தங்கச்சி, அகவை 75)**

மானிப்பாய் டச்சு வீதியைப் பிறப்பிடமாகவும் கந்தரோடை ஆறுமுக வீதியையும் தற்போது நோர்வே ஒஸ்லோவையும் வதிவிடமாகக் கொண்ட இராசலட்சுமி தருமராஜா அவர்கள் 10.08.2024 சனிக்கிழமை அன்று, இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-தங்கம்மா தம்பதிகளின் பாசமிகு மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா-இராசம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற திரு.தருமராஜா அவர்களின் பாசமிகு அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பஞ்சலிங்கம், நாகராசா, அருமைத்துரை மற்றும் இராஜலிங்கம், தவமணி, பூமலர், பாக்கியலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கஜேந்திரன் (ஈசன்–அவுஸ்ரேலியா), கலைவாணி (நோர்வே), கலைவதனி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நிசானி (அவுஸ்ரேலியா), நெவில் (நோர்வே), தவராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கவின், அபினா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் டால்ரன், எல்ரன், ஜரின் (நோர்வே), துவாரகா, அரச்சிதன், அபர்ணன் (கனடா) ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாருடைய ஈமைக்கிரிகைகள் நாளை மறுதினம் (15.08.2024) வியாழக்கிழமை அன்று சாஸ்பெரக்காகன் மண்டபத்தில் காலை 09.00 மணியில் இருந்து 11.30 மணி வரை இடம்பெற்று பகல் 12.00 மணியளவில் அதே இடத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**

| | | |
|---|---|---|
| கஜேந்திரன் | (Australia) | +61 43 369 3382 |
| நெவில் | (Oslo) | +479 208 4150 |
| கலைவாணி | (Oslo) | +479 515 2099 |
| தவராசா | (Canada) | +514 867 4657 |

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 42564) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பணம் செலுத்தல் நாளையுடன் நிறைவு!

*மறுநாள் வேட்புமனுத்தாக்கல்*

**யாழ்ப்பாணம், ஓக.13**

**ஜனாதிபதித் தேர்தலில் கட்டுப்பணம் செலுத்துவதற்குரிய கால எல்லை நாளை புதன்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடைகின்றது.**

வேட்புமனுத்தாக்கல் நாளைமறுதினம் 15ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.
வேட்புமனுத்தாக்கலை முன்னிட்டு தேர்தல் ஆணைக்குழு வளாகம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வரக்கூடிய அரசியல் பிரமுகர்களின் எண்ணிக்கையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
வேட்பு மனுத்தாக்கல் தொடர்பில் ஆட்சேபனை முன்வைக்கவும் அவகாசம் வழங்கப்பட்டு, அதன் பின்னர் ஏனைய நடவடிக்கைகள் இடம்பெறும்.
வேட்பு மனுத்தாக்கலின் பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழு வளாகப் பகுதியில் பேரணிகளை நடத்துவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.
(ச-44)

# அமைச்சின் செயலாளரிடம் விளையாட்டுத்துறை

கொழும்பு, ஓக. 13
அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ பதவி விலகல் செய்ததை அடுத்து விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் அன்றாட நடவடிக்கைகளை அதன் செயலாளர் கே.மகேசன் மேற்பார்வையிட உள்ளார் என அமைச்சின் தரப்புகள் தெரிவித்துள்ளன.
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, குறித்த அமைச்சுப் பதவியை தனக்கு கீழ் கொண்டு வருவதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடும் வரை அதன் பணிகளை அமைச்சின் செயலாளரே மேற்கொள்வார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# தனியார் துறை ஊதிய உயர்வு

*அமைச்சரவை அனுமதி*

கொழும்பு, ஓக. 13
தனியார் துறை ஊழியர்களுக்கான ஊதியத்தை அதிகரிக்க தேசிய குறைந்தபட்ச ஊதிய அதிகரிப்பு திருத்தச் சட்டவரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச் சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
அதன்படி குறைந்தபட்ச மாதாந்த ஊதியத்தை 17,500 ரூபாவாகவும் குறைந்தபட்ச நாளாந்த ஊதியத்தை 700 ரூபாவாகவும் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
இது தொடர்பான சட்டவரைவு விரைவில் நிறைவேற்றப்படும்.
அதேவேளை முன்பு தனியார் துறை ஊழியர்களின் தேசிய குறைந்தபட்ச மாதாந்த ஊதியம் 12,500 ரூபாவாகவும் குறைந்தபட்ச நாளாந்த ஊதியம் 500 ரூபாவாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# முதுகலைப் பட்டப்படிப்பு இணைவு குறைவடைவு!



யாழ்ப்பாணம், ஓக. 13
கடந்த நான்கு வருடங்களில் நாடளாவிய ரீதியில் முதுகலைப் பட்டதாரி மாணவர் சேர்க்கை கணிசமாகக் குறைந்துள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் சமூக விஞ்ஞான முதுகலைப்பட்டதாரி நிறுவனத்தின் பணிப்பாளர் வசந்த அத்துகோரள தெரிவிக்கையில்,
பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞானத்தில் 2021 இல் முதுகலைப் பட்டப்படிப்புக்கு பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 1096 ஆக இருந்ததாகவும், 2022 இல் அது 889 ஆகக் குறைந்துள்ளது. பொருளாதார நெருக்கடி, பட்டப்படிப்புகளுக்கு செலவு செய்ய பணமின்மை, பிற நாடுகளுக்கு இடம்பெயர்தல், நாட்டின் வரி விதிப்பு போன்ற காரணங்களால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ச-இ)

# 1,700 ரூபா நிறைவேற்றம்

கொழும்பு ஓக.13
பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா நாளாந்த சம்பளத்தை வழங்குவதற்கான தீர்மானம் சம்பள நிர்ணய சபையில் நேற்றுத் திங்கட்கிழமை நிறைவேற்றப்பட்டுள்ளது.
நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள தொழில் செயலகத்தில் சுமார் 4 மணித்தியாலங்கள் இதற்கான பேச்சு இடம்பெற்றது. (ச-இ)

# நாகப்பட்டினம் கப்பல்சேவை பயணக்கட்டணம் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 13
காங்கேசன்துறை - நாகப்பட்டினம் இடையிலான பயணிகள் போக்குவரத்து கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், பயணக்கட்டணம் குறித்த தகவல் வெளியாகியுள்ளது.
இந்தக் கப்பல் சேவை மீண்டும் எதிர்வரும் 15ஆம் திகதி உத்தியோகபூர்வமாக சேவையில் ஈடுபடவுள்ளது. அதன்படி பயணி ஒருவருக்கு 7,500 ரூபா கட்டணம் வசூலிக்கப்படவுள்ளது.
இந்தக் கப்பலில் பயணிகளுக்கு துரித உணவுகளை கட்டணத்துடன் பெற்றுக்கொள்ள உணவக வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
ஒருவர் தம்முடன் 60 கிலோ வரையான பொதியை எடுத்துச் செல்லவும், 5 கிலோ வரை கைப்பையில் எடுத்துச் செல்லவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதேவேளை கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி இந்தியாவின் நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன்துறைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டது. எனினும் போக்குவரத்து சேவை பல முறை இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)


# புதினம் தெரியுமோ?

**யாழ்ப்பாணத்தில் ஒருகாலத்தில பெரியாஸ்பத்திரியை விடவும் பேமஸா இருந்த பிரைவேட் ஆஸ்பத்திரி அது. அதைப் பிரைவேட் ஆஸ்பத்திரி எண்டும் சொல்லேலாது. ஏனெண்டால் அதைத் தனி ஒராள் நடத்தேலை. பொதுவான அமைப்பு ஒண்டுதான் நடத்துது. முந்தி என்ன வருத்தமெண்டாலும் சனம் அங்கதான் ஓடிப்போகும். அந்தளவுக்கு அங்க ட்ரீட்மெண்ட் தரமா இருந்தது. அந்த ஆஸ்பத்திரியாலதான் அந்த ஊருக்கே ஒரு பெருமையும் இருந்தது. ஆனால் இப்ப எல்லாம் பழங்கனவாப் போட்டுது. இப்ப அது எந்த ஆஸ்பத்திரி எண்டு 'மூளை' உள்ளவை கண்டுபிடிச்சிருப்பியள்.**

**அந்த பிரைவேட் ஆஸ்பத்திரிக்குப் பக்கத்தில அரசாங்க ஆஸ்பத்திரியளும் பெரிசா இல்லை. கொஞ்சம் தூரத்தில தான் இருக்குது. அந்த அரசாங்க ஆஸ்பத்திரியளிலையும் ஒண்டில வார்ட் வசதி இல்லை, மற்றதில சரியான வளங்கள் இல்லை. அதால அங்கத்தைச் சனங்கள் இப்பவும் பழைய நினைப்பில ஏதும் வருத்தம் , துன்பம் எண்டால் அங்கதான் ஓடிப்போகினம். ஆனால் அங்க இரவில நிக்கிற நேர்ஸ்மாருக்கும், அட்டெண்டர்மாருக்கும் போன் பாக்கவே நேரமில்லை. அதோட அவையள் போன் பார்த்த களைப்புக்கு கண்ணுக்கு ஓய்வு குடுக்க வடிவா நித்திரையும் கொள்ளத்தானே வேணும். அதுக்குள்ள வருத்தக்காரர் காயம், ரத்தம், பித்தம், வயித்துக்குத்து எண்டு போனால் அவைக்கு கோபம் வரத்தானே செய்யும். அதால காய்ச்சல் எண்டு ஆரும் போனாக்கூட 'உடன பெரியாஸ்பத்திரிக்கு போங்கோ' எண்டதுதான் அவையின்ர மந்திரமா இருக்கும். அங்க வேலை செய்யிற எல்லாருக்கும் வருத்தக்காரருக்கு ட்ரீட்மெண்ட் செய்யிறதைப் பழக்கிறதை விடவும் 'உடன பெரியாஸ்பத்திரிக்கு போங்கோ' எண்டு சொல்ல மட்டும் தான் பழக்கியிருக்கினம் போல. அப்பிடி ஒரே சொல்லையே எல்லாருக்கும் சொல்லுறதுக்கு இப்பிடி காசைக் கொட்டி ஆக்களை வேலைக்கு வைச்சிருக்கிறதை விட, ஒரு கிளியைப் பிடிச்சு 'உடன பெரியாஸ்பத்திரிக்கு போங்கோ' எண்டு சொல்லப்பழக்கிவிட்டால் செலவு மிச்சமெல்லோ.**

**இந்த ஆஸ்பத்திரியில வேலை செய்யிறவைக்கும் சம்பளம் அப்பிடி இப்பிடித்தான் குடுபடுகுதாம். அதாலதான் அவையும் இப்பிடி பெரியாஸ்பத்திரிக்கு வருத்தக்காரரைக் கலைச்சு விடுகினமோ தெரியேலை. அதோட அவைக்கு அனுபவமும் குறைவு. கிட்டடியில ஒராளுக்கு யூரினை பையுக்குள்ள போக விடுறதுக்காக ஆணுறுப்பில 'கதீற்றர்' கொழுவி விடோணும். ஆனால் அங்க நிண்டவைக்கு அதில அனுபவம் குறைவு. உண்மையில கதீற்றர் கொழுவ வேணும் எண்டால், ஒரு டாக்குத்தரும் நிக்கோணும். அதையெல்லாம் அந்த ஆஸ்பத்திரியில எதிர்பாக்கமுடியாது. 'அட்டெண்டர் தான் டாக்குத்தர், நேர்ஸ் தான் சேர்ஜன் ' எண்ட நிலைமைதான் அங்க. அதால கதீற்றரை கொழுவேக்க ஏதோ மாறிக் கொழுவிப் போட்டினம். வருத்தக்காரருக்கு ரத்தம் ஒழுகத் தொடங்கிட்டுது. பிறகென்ன, 'உடன பெரியாஸ்பத்திரிக்கு போங்கோ' எண்ட பழக்கப்பட்ட மந்திரத்தைச் சொல்லியிருக்கினம். அந்த வருத்தக்காரரை பெரியாஸ்பத்திரிக்கு கொண்டுபோனால், சாறம் முழுக்க ஒரே ரத்தமயமாம். கொஞ்சமெண்டால் ஆள் முடிஞ்சிருக்கும், பெரியாஸ்பத்திரியில பழி விழுந்திருக்கும். நல்லகாலத்துக்கு உடனடியா ட்ரீட்மெண்ட் செய்து ஆளைக் காப்பாத்திப் போட்டினமாம்.**

**அந்த ஆஸ்பத்திரியை மேற்பார்வை செய்ய ரண்டரை லட்சம் ரூபா சம்பளத்தில பெஞ்சன் எடுத்த பெரிய டாக்குத்தர் ஒருத்தர் இருந்தும், இப்பிடி அனுபவமில்லாத, ஆக்களோட சனத்தில அக்கறையில்லாமல் அந்த ஆஸ்பத்திரி இயங்குதெண்டால் என்னத்தைச் சொல்ல?**



-பட்சி
padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு அவதானம்

யாழ்ப்பாணம், ஓக.13
பருவமழை ஆரம்பித்துள்ள நிலையில் டெங்கின் தாக்கத்தைக் குறைக்க மக்கள் விழிப்புடன் செயற்படவேண்டும் என சாவ கச்சேரி சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர்.
நாட்டில் அண்மைக்காலமாக டெங்கால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.
பிரதேசத்தில் டெங்கின் தாக்கத்தைக் குறைக்க மக்கள் தமது குடியிருப்புகள் மற்றும் காணிகளைத் துப்புரவாக வைத்திருப்பதுடன் நீரேந்துப் பொருள்கள் காணப்படின் அவற்றை அப்புறப் படுத்துமாறும் சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தினர். (ச-9)


## கண்ணீர் அஞ்சலி

கடந்த 09.08.2024 இல் இந்தியாவில் காலமான
அமரர்
**அருளாம்பிகை கனகேந்திரன் (ஈழவேந்தன்)**
மறைவையொட்டி அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விக்னவிநாயகனை வேண்டுகின்றோம்.
அன்னாரின் தகனக்கிரியைகள் இந்தியாவில் நடைபெற்றன.


சகோதரர்கள்
மண்டைதீவு -6
077 637 5636

(CS/55918) J-1



## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
01 • 03 • 1955



இறப்பு
10 • 08 • 2024

### தம்பிப்பிள்ளை வரதராஜா

**ஈழமணித் திருநாட்டின் நித்திலமாய்த் திகழும் யாழ்நகரின் இருபாலை கோப்பாய் கிராமங்களின் எக்ஸ்பிறஸ் கல்வி நிலைய நிறுவுநரும், கணித ஆசானுமாகிய எங்கள் வரதன் மாஸ்டருக்கான இரங்கல்பா**

ஆயிரமாயிரம் சான்றோர்களை
அவனியிங்கு உருவாக்கிய ஆசானே

சிம்மக் குரலும் கம்பீரமும்
சிக்கலான கணித பாடத்தையும் இலகுவாய்
சிரசில் பதிய வைத்தவை

நேரம் தவறாமை
நேர்மை தளராமை
நேரிய பார்வை என கற்றுத் தந்தவை
நெடிய பட்டியல்

கண்டிப்பான வழி நடத்தல், எமை
கட்டுக்கோப்புடன் இன்றும் வாழ
கற்றுத் தந்தது

காலமென்ற சுழல் காற்றில்
கலையாத கணங்கள் உண்டோ ?
மாந்தர் தம் பிறப்பினில்
மரணமும் நிஜமன்றோ ?

காரணங்கள் பல சொல்லி
கவலைகளை கலைத்திட
காலனவன் கவர்ந்தது வெறும் உயிரல்ல, எம்
கனவல்லவா ?

எமை விட்டு மறைந்தாலும்
எம் வாழ்வில் ஓர் அங்கமாய்
என்றென்றும் எம்மோடு
எம் நினைவுகளாய் வாழ்வீர்கள் ஆசானே.

ஆசானின் ஆத்மா சாந்தி அடைய கண்ணீர்
அஞ்சலியினை காணிக்கையாக்குகிறோம்.

**எக்ஸ்பிறஸ் 93 ஆம் ஆண்டு உயர்தர மாணவர்கள்**


# சஜித் - த.மு.கூட்டணி ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, ஓக.13
தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கும், ஐக்கிய மக்கள் கூட்டணி ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ வுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை நேற்றுக் கையெழுத்தானது.
இது தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கூறுகையில்;
மலையக தமிழ் மக்கள் நலன்சார்ந்த, இத்தகைய ஒரு பரந்துபட்ட ஒப்பந்தம், ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருடன் இது வரை நாட்டில் செய்யப்படவில்லை.
இந்த ஒப்பந்தம் இந்திய வம்சாவளி மலையக இலங்கையர் அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் மிக்கதாக இருக்கும்.
கல்வி, தொழில் பயிற்சி, இளைஞர் முன்னேற்றம், சுகாதாரம், போஷாக்கு, வாழ்வாதார காணி, தொழில்வாய்ப்பு, வீடமைப்பு காணி, அரச பொது நிர்வாகக் கட்டமைப்புக்குள் மலையகம், ஆட்சி உரிமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் புரிந்து ணர்வு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன - என்றார். (ச-இ)

# புதிய தவறணைகள்: நெடுந்தீவில் அனுமதி

யாழ்ப்பாணம், ஓக. 13
நெடுந்தீவுப் பிரதேச செயலகப் பிரிவில் மூன்று புதிய தவறணைகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் நேற்றுத் திங்கட் கிழமை வழங்கப்பட்டுள்ளன.
ஜே/01 நெடுந்தீவு மேற்கு கிராம அலுவலர் பிரிவு, ஜே/04 நெடுந்தீவு மத்திக் கிராம அலுவலர் பிரிவு, ஜே/05 நெடுந்தீவு கிழக்கு கிராம அலுவலர் பிரிவு ஆகிய இடங்களில் நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தால் குறித்தொதுக்கப்பட்ட பிரதேசங்களில் விற்பனை நிலையங்கள் நிறுவப்பட்டு நேற்றுமுதல் இவை செயற்பட ஆரம்பித்துள்ளன.
இதேவேளை - சமூக நலனைக் கருத்தில் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட முறைமையின் ஊடாக மாத்திரம் கள் விற்பனை இடம்பெறுவதை உறுதி செய்வதுடன் பனை உற்பத்தியை ஊக்குவித்தலையும் நோக்காகக் கொண்டே குறித்த அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளதாக நெடுந்தீவுப் பிரதேச செயலக நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (அ-ஓ-66)


## மரண அறிவித்தல்

பிறப்பு
23 • 08 • 1932



இறப்பு
11 • 08 • 2024

### யோகநாதன் சிவபாக்கியம்

(இளைப்பாறிய ஆசிரியை யா/வரணி மத்திய கல்லூரி, யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி)

குடியிருப்பு மந்துவிலைப் பிறப்பிடமாகவும், மீசாலை வடக்கு மற்றும் Cheam London ஐ வசிப்பிடமாகவும் கொண்ட யோகநாதன் சிவபாக்கியம் நேற்று முன்தினம் (11.08.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற யோகநாதன் அவர்களின் மனைவியும், மதிவதனி (UK), மகேந்திரன் (UK) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரதாபன் (UK), வசந்தி (UK) ஆகியோரின் அன்பு மாமியாரும், அஸ்வின் (UK), அவனியா (UK), தாரணி (UK), லவனியா (UK) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், செல்லம்மா, இராசம்மா, காலஞ்சென்ற சுப்பிரமணியம், மற்றும் இரத்தினம், சின்னம்மா, ஞானப்பிரகாசம் (UK) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சி.கமலரூபனின் (பிரதேச செயலகம் - தென்மராட்சி) பெரியதாயாரும், காலஞ்சென்ற சுரேஸ்குமார் மற்றும் சுபாசினி (France), சஞ்ஜித் (UK), துஷியந் (UK) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சபாரத்தினம், சின்னத்தம்பி மற்றும் கமலாதேவி, சோமசுந்தரம், மங்கையற்கரசி (UK) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மதிவதனி - 0044 772 340 4687
மகேந்திரன் - 0044 793 000 5175
கமலரூபன் - 077 723 2192

(CR/42922) J-1

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளம் அமைக்க எதிர்ப்பு மக்கள் கவனவீர்ப்பு

செட்டிகுளம் – பீகிடியா பாம் கிராமத்தில் தனிநபரொருவர் சட்டவிரோதமாகக் குளம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதேச மக்களால் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

தனிநபர் ஒருவர் எந்தவித அனுமதியுமின்றி புதிதாக அணைக்கட்டு அமைத்து குளம் அமைப்பதனால் அதற்குக் கீழ் வாழுகின்ற 80க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்படுவதாகவும் குளக்கட்டு உடைப்பெடுக்குமாயின் தமது வீடுகள் வெள்ளநீரில் மூழ்கிவிடும் எனவும் இதனைத் தடுத்து நிறுத்துமாறு கோரியே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வயல்களே இல்லாத இடத்தில் எந்தவித பொறிமுறையும் இன்றிக் குளக்கட்டு அமைப்பதனால் இதற்கு அருகாமையிலுள்ள பிரதேச மக்களின் வாழ்வு கேள்விக்குறியாகியுள்ளதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அப்பிரதேசத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் அங்கு வந்து, இது வனவளதிணைக்களத்துக்குச் சொந்தமான காணி. பிரதேச செயலகம் வனவள திணைக்களத்தோடு கலந்துரையாடி தீர்வைப்பெற்றுத் தரும் எனத் தெரிவித்ததையடுத்து போராட்டம் முடிவுக்கு வந்தது. (ஓ–110)


## வேலைக்கு ஆள் தேவை

கொடிகாமத்தில் வேலைக்கு ஆள் தேவை பூமாலை கட்டத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இருபாலரும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077 989 8190, 075 475 7056


## மரண அறிவித்தல்

மலர்வு 01 . 06 . 1931



உதிர்வு 11 . 08 . 2024

**கபிரியேல் பேதுறுப்பிள்ளை**

நவாலியைப் பிறப்பிடமாகவும், தவசிகுளம் மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கபிரியேல் பேதுறுப்பிள்ளை அவர்கள் நேற்று முன்தினம் (11.08.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி வழிபாட்டு நிகழ்வு இன்று (13.08.2024) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தவசிகுளம் மிருசுவில் காணிக்கை மாதா ஆலயத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மிருசுவில் பங்கு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
அன்ரன் குலாஸ் (கனடா)
எட்மன் ஜெயராசா - 076 985 2121

(CR/42923) J-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 07 . 12 . 1997



இறப்பு 11 . 08 . 2024

**அமரர் ஜெயகாந்தன் சிவதர்சன்**

கொக்குவில் கிழக்கு கொக்குவிலை பிறப்பிடமாகக் கொண்ட ஜெயகாந்தன் சிவதர்சன் அவர்கள் நேற்று முன்தினம் (11.08.2024) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் ஜெகநாதன் ஜெயகாந்தன் (முகேஸ் அண்ணா சைவ உணவகம்), ஜெயகாந்தன் கலைச்செல்வி (ஆசிரியர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மகனும் சபிநா, முகேஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெகநாதன் சரோஜினி, சுப்பையா சரோசா, பஞ்சாட்சரம் ராஜேஸ்வரி, இராமநாதன் ராமலக்ஷ்மி ஆகியோரின் அன்புப் பேரனும் ரவிச்சந்திரன் ராசாத்தி, கிருபாகரன் கமலா ஆகியோரின் அன்பு மருமகனும் ரவிதாஸ் கலாராணி (பிரான்ஸ்), சிவபாலசோதி சாரதா (லண்டன்), ரங்கராஜ் இந்துராணி (பிரான்ஸ்), ஈஸ்வரதாஸ் மேரி ஆகியோரின் அன்புப் பெறாமகனும் சிவாஸ்கரன், சசிகலா, சுதா வாணி ஆகியோரின் அன்பு மருமகனும் ஸ்ரீகுமரன் மனோராகினி (ராஜா டமா), சரவணன் தயாளினி, பத்மநாதன் யோகதர்சினி ரகுநாதன் ஆகியோரின் அன்புப் பெறாமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.08.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

36/2 குமாரசாமி வீதி,
பரமேஸ்வர சந்தி.

தகவல்:
குடும்பத்தினர்
077 606 2350

(CS 1123) V-1

# மரண அறிவித்தல்

## இராசலட்சுமி சங்கரப்பிள்ளை (கிளாக்கர்)



தோற்றம் 08.12.1935 மறைவு 08.08.2024

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சிவன்கோயிலடியை பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையை வாழ்விடமாகவும் தற்போது கனடா Brampton ஐஹிலிடம் வதிவிடமாகவும் கொண்ட ச.இராசலட்சுமி அவர்கள் கடந்த 08.08.2024 வியாழக்கிழமை அன்று சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம்-நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும் ஸ்ரீகஜகரி (கவிதா), ஸ்ரீகா (அமுதா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காசிதரன் அவர்களின் அன்பு மாமியாரும் மதுரன், வம்ஷிகா, , கிருஷ்ணிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ் சென்றவர்களான பாலசுப்பிரமணியம் அன்னலட்சுமி, கணேசலிங்கம், நாகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற இராஜவதியின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம், சோமசுந்தரம், தியாகலிங்கம் ஆகியோரின் அண்ணியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 18.08.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று கனடா நேரப்படி 6.00 - 9.00 pm பார்வைக்கு வைக்கப்பட்டு 19.08.2024 திங்கட்கிழமை அன்று 11.00-1.00 மணியளவில் கனடாவில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Lotus Funeral Home
121, City Viewdrive. Toronto
Ontario Canada

தகவல்:
மகள் +647 997 2050
மருமகன் +416 841 6214

(CR 28289) V-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கடுகதி மோதி ஒருவர் பலி!



கொழும்பு, ஒக.13
கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த கடுகதி தொடருந்தில் மோதி ஒருவர் உயிரிழந்தார்.
சடலம் இதுவரையில் அடையாளம் காணப்பட வில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். சடலம் பேராதனை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள் ளதுடன் மேலதிக விசாரணைகளை பேராதனை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

# இலங்கைக் கடற்படையினர் கடற்கொள்ளையர் அல்லர்

### வடக்குக் கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக.13


**இலங்கைக் கடற்படை இந்திய எல்லைக்குள் வந்து தங்களுடைய படகு களில் இருக்கின்ற பொருள்கள், ஜி.பி.எஸ். போன்ற கருவிகளைக் கொள்ளையடித்துச் செல்வதாக இந்தியத் தரப்பினர் கூறுகின்றனர். எமது கடற் படையைக் கடல் கொள்ளையர் என வர்ணிக்கும் இந்தக் குற்றச்சாட்டை முழுமையாக எதிர்க்கிறோம்.**

-இவ்வாறு வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் கூறுகையில், எமது கடல் எல்லைக்குள் வரும் இந்திய மீனவர்களை தான் கடற் படை கைதுசெய்கின்றது. எங்கள் நாட்டுக்குள்ளே வந்து எங்கள் வளங்களையும், வாழ்வாதா ரத்தையும் கொள்ளை அடித்துச் செல்வது இந்திய இழுவைப் படகு களே.
உங்களுக்குத் துணிவிருந்தால் உங்களுக்கு அயலில் உள்ள சிறிய நாடான பாகிஸ்தானுக்கு அண்டிய பகுதியில் அல்லது அந்த நாட்டு எல்லைக்குள் சென்று மீன்பிடித்துப் பாருங்கள்.
எனவே இப்படியான பொய்யான கருத்துகளைக் கூறிக்கொண்டு எங்களுடனான பேச்சுவார்த் தையை முறிக்கவேண்டாம்.
இலங்கை - இந்திய மீனவர்களு டைய பிரச்சினைக்கு ஒரு நிரந் தரத் தீர்வுகாணவேண்டும் - என் றார். (ச-27)

## ட்ரம்ப் - ஹரிஸ் நேரடி விவாதம்

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் - கமலா ஹரிஸ் இடையே நேரடி விவாதம் அடுத்த மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.
அமெரிக்காவில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் கமலா ஹரிஸும், குடிய ரசுக் கட்சி சார்பில் முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்பும் போட்டியிடவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.
அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக புதிதாகக் கருத்துக்கணிப்பில் டொனால்ட் ட்ரம்பைவிட கமலா ஹரிஸ் 5 புள்ளிகள் முன்னிலை யில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கமலா ஹரிஸ் 42 சதவீத மும், டொனால்ட் ட்ரம்ப் 37 சதவீதமும் ஆதரவைப் பெற்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (ச)

## கல்விச் சுற்றுலா





சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி நிலைய மாணவர்கள் நேற்று முன்தி னம் ஞாயிற்றுக்கிழமை உத யன் பணிமனைக்கு கல்விச் சுற்றுலாவுக்கு வருகை தந்து பத்திரிகையின் செயற்பாடு கள் குறித்து அறிந்துகொண் டனர். (ச-45-125)

## ஒலிம்பிக் நிறைவு அமெ. முதலிடம்

கடந்த மாதம் 26 ஆம் திகதி உத்தி யோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட பரிஸ் ஒலிம்பிக் போட்டிகள் நேற்று முன்தினம் நிறைவடைந்தன.
அதற்கமைய பதக்கப்பட்டியலில் அமெரிக்கா 40 தங்கப் பதக்கங்கள், 44 வெள்ளிப் பதக்கங்கள், 42 வெண்கலப் பதக்கங்கள் என மொத் தமாக 126 பதக்கங்களைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது.
இரண்டாவது இடத்தைப் பிடித்த சீனா 40 தங்கப் பதக்கங்கள், 27 வெள்ளிப் பதக்கங்கள், 24 வெண் கலப் பதக்கங்கள் என மொத்தமாக 91 பதக்கங்களைப் பெற்றுக்கொண் டது. அதனைத் தொடர்ந்து ஜப்பான் 20 தங்கப் பதக்கங்கள், 12 வெள்ளிப் பதக்கங்கள், 13 வெண்கலப் பதக்கங் கள் என மொத்தமாக 45 பதக்கங் களை வென்று மூன்றாவது இடத்தை தன்வசப்படுத்தியுள்ளது. (ச-இ)



### 5 ஒலிம்பிக் தொடர்களில்

## தொடர்ச்சியாக தங்கம் வென்ற வீரர்

கியூபா மல்யுத்த ஜாம்பவான் மிஜான் லோபஸ் ஒலிம் பிக்கில் தொடர்ச்சியாக 5 முறை தங்கம் வென்ற முதல் வீராக புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார்.
41 வயதாகும் இவர், நடைபெற்று வரும் ஒலிம்பிக் தொடரில் கிரேக்கரோமன் மல்யுத்தத்தில் பங்கேற்று, தன்னுடைய 5 ஆவது தங்கத்தை வென்றுள்ளார்.
இதற்கு முன்னதாக தனிநபராக 4 முறை ஒலிம்பிக் கில் தங்கத்தை அமெரிக்காவின் நீச்சல் வீரரான மைக்கேல் ஃபெல்ப்ஸ், நீளம் தாண்டுதல் வீரரான கார்ல் லூயிஸ், தட்டு எறிதல் வீரரான ஆல்ஃபிரட் ஓர் டர் மற்றும் டென்மார்க் நாட்டைச் சேர்ந்த படகோட் வீரர் பால் எல்வ்ஸ்ட்ரோம் ஆகியோர் வென்றுள்ளனர்.
இவர்களை தற்போது முந்தியுள்ளார் மிஜான் லோபஸ். (ச-இ)

## தனிப்பட்ட நலனுக்கு களமிறங்கக்கூடாது!

### நாட்டுக்கே நட்டமென பவ்ரல் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக. 13
தனிப்பட்ட நோக்கங்களை அடிப் படையாகக்கொண்டு ஜனாதிப தித் தேர்தலில் போட்டியிடுவதை வேட்பாளர்கள் தவிர்க்கவேண் டும். இந்த செயல் ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்தை துஷ்பிர யோகம் செய்யும் நடவடிக்கை யாகும்.
இவ்வாறு பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது: 2010 ஜனாதிபதித் தேர்தலில் 35பேர் வேட்பாளர்களாக களமி றங்கி இருந்தனர். இவர்களில் 33 பேரும் இணைந்து 2.5 வீத வாக்குகளையே பெற்றிருந்த னர். அதனால் வரலாறு முழுவ தும் நாங்கள் ஆராய்ந்து பார்த் தால், பிரதான வேட்பாளர்க ளைத்தவிர ஏனையவர்களுக்கு நூற்றுக்கு 2வீத வாக்குகளைக் கூட பெற்றுக்கொள்ள முடியா மற் போயிருக்கிறது.
அதேநேரம் வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பட் சத்தில் வாக்குச்சீட்டின் அளவு அதிகரிக்கிறது. அதன் காரண மாக தேர்தல் செலவும் அதிகரிக்கி றது. எனவே ஜனாதிபதித் தேர்தலில் பல்வேறு தனிப்பட்ட காரணங்க ளின் அடிப்படையில் களமிறங்கு வதை வேட்பாளர்கள் தவிர்க்க வேண்டும்- என்றார். (ச-இ)

## டிஜிற்றல் முறை சுயநிர்ணயம் தமிழ் மக்களுக்கு வழங்கலாம்

### கூறுகிறார் சம்பிக்க

கொழும்பு, ஒக. 13
அரச கட்டமைப்பு டிஜிற்றல் மயப்படுத்தப்பட் டால் தமிழர்களுக்கு டிஜிற்றல் முறைமை ஊடாக சுயநிர்ணயத்தை வழங்கலாம். அத னால் மொழிசார்ந்த பிரச்சினைகளும் தோற் றம் பெறாது.
-இவ்வாறு ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.
செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற வுள்ள ஜனாதிபதித் தேர்தல் தீர்மானமிக்கது. தமிழர்கள் சுயநிர்ணய உரிமையைக் கோருகி றார்கள். அரச கட்டமைப்பை டிஜிற்றல் மயப்ப டுத்தினால் தமிழர்களுக்கு டிஜிற்றல் முறைமை யிலான சுயநிர்ணயத்தை வழங்கமுடியும். பொருளாதாரக் காரணிகளை முன்னிலைப் படுத்தி ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தீர்மா னம் எடுப்பேன் என்றும் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலுக்கான முன்னாயத்தக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 13

ஜனாதிபதித் தேர்தலுக்குக் குழுக் கடமைகளுக்காக நியமிக்கப்பட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுடனான முன்னாயத்தக் கலந்துரையாடல் நேற்றுத் திங்கட்கிழமை பி.ப. 3 மணியளவில் யாழ். மாவட்டச் செயலகத்தில் யாழ். மாவட்டப் பதில் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக குழுக்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டு ஆராயப்பட்டன.

கலந்துரையாடலில் யாழ். மாவட்ட மேலதிக செயலர் (காணி) க.சிறீமோகனன், மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ், உதவி மாவட்டச் செயலர், பிரதம கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர், உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக நியமிக்கப்பட்ட பதவி நிலை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ஓ-66)

# ரஷ்ய இராணுவத்தில் இணைந்த இலங்கையர் ஐந்து பேர் கைது

ரஷ்ய இராணுவத்தில் இணைந்து உக்ரைனுக்கு எதிராக போராடிய இலங்கை இராணுவத்தின் முன்னாள் சிப்பாய்கள் ஐந்து பேரை உக்ரைன் இராணுவம் கைது செய்துள்ளது. இவர்கள் ரஷ்ய எல்லையை கடந்து உக்ரைனுக்குள் பிரவேசிக்க முற்பட்டவேளையிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் ஐவரும் யுத்தக்கைதிகள் எனவும் உக்ரைன் அறிவித்துள்ளது.

இவர்கள் ஐந்து பேரைவிட மூன்று பேர் போரில் கொல்லப்பட்டுள்ளதாகவும் உக்ரைன் அறிவித்துள்ளது.

துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரகம் உக்ரைனுடன் தொடர்பு கொண்ட போதுஇந்த விடயத்தை உக்ரைன் தெரியப்படுத்தியுள்ளது. (ஓ-6)

## புதிய...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை ஏற்று, நேற்று மாலை 4 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் சார்பில் அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் மற்றும் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் ஆகியோரும், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி சார்பில் அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமானதர்மலிங்கம்சித்தார்த்தனும், ஜனநாயக போராளிகள் கட்சியின் சார்பில் அதன் தலைவர் வேந்தன் மற்றும் செயலாளர் துளசி ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

சந்திப்பின்போது, பிரதானமாக தமிழ் மக்களினுடைய அரசியல் அபிலாஷைகளைத் தீர்க்கும் முகமாக சமஷ்டி அதிகாரப் பகிர்வு தேவை என்ற கருத்து தமிழ்ப் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தன்னால் அதை தற்போது செய்ய முடியாது என்றும் ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு அதில் தெரிவாகும் அரசாங்கத்துடன் அனை வரும் பேசி அது தொடர்பில் முடிவுக்கு வரலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அதுவரைக்கும் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தின் ஊடாகக் கொண்டுவரப்பட்ட மாகாணசபைக் கட்டமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்காக தான் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் அதற்காகத் தன்னிடம் தயாரித்து வைக்கப்பட்டிருக்கும் யோசனைகளடங்கிய ஆவணத்தையும் (தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசாவிடம் ஏற்கனவே வழங்கியது) தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் கையளித்தார்.

ஏற்கனவே மாகாணசபையின் பறிக்கப்பட்ட அனைத்து அதிகாரங்களையும் மீள வழங்குவதாகவும், நிதி உட்பட மேலதிக அதிகாரங்களையும் பொருளாதார அபிவிருத்தி ஆணைக்குழுவையும் மாகாணசபை கொண்டிருக்கும் என்றும் இதன்போது அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் சார்பில், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, எஞ்சியுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு மற்றும் அபகரிப்பை தடுப்பது, தமிழ் இளைஞர்கள், யுவதிகள் நீதியற்ற முறையில் கைது செய்யப்படுவது, விசாரணை என்ற போர்வையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் அச்சுறுத்தல் நடவடிக்கையை நிறுத்துதல், இந்திய மீனவர்களுடைய அத்துமீறலினால் எமது மீனவர்கள் படுகின்ற துன்பம், உட்பட பல விடயங்கள் தீர்க்கப்பட வேண்டுமென ஜனாதிபதி ரணிலிடம் வலியுறுத்தப்பட்டன.

இதற்கான தீர்வுகளை தான் நிச்சயமாக வழங்குவதாகவும் ஏற்கனவே சில விடயங்களுக்கான தீர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பாக அரசியல் கைதிகள் விடுதலை மற்றும் தொல்லியல் விவகாரங்களை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தான் சமர்ப்பித்த ஆவணத்தில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன எனவும், அவற்றைப் பரிசீலித்த பின்னர் தொடர்ந்தும் சந்திப்புகளை மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார். (அ-ஓ-5-26)

## மட்டுப்படுத்தப்பட்ட...

விநியோகம் இடம்பெறுகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்களிடம் கேட்டபோது தெரிவிக்கப்பட்டதாவது:-

வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் சில வாரங்களாக மண்ணெண்ணெய்க்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. வருடாந்தம் மண்ணெண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் பராமரிப்புக்காக 40 நாள்கள் மூடப்படும். எதிர்வரும் 25ஆம் திகதி முதல் மீண்டும் அது செயற்பட ஆரம்பிக்கும். அதுவரையிலான இடைப்பட்ட காலப் பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படும். வடக்கின் கரையோரப் பிரதேசங்களிலுள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டுள்ளது. அதேபோல ஏனைய இடங்களிலுள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கும் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மக்களுக்கு வழங்கப்படும். இன்னும் சில தினங்களில் விநியோகம் வழமை பெறும் - என்றனர். (அ-ஓ-5)

## ஒற்றையாட்சியே...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி மேலும் தெரிவித்ததாவது:-

"அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் பிரகாரம் மாகாணசபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்கள் பகிரப்படுமா? என ஜனாதிபதியிடம் நாம் வினவினோம். இவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறினார். ஆனால் எமது கொள்கை அதுவல்ல. அதனால்தான் நாம் ஜனாதிபதி ரணிலை ஆதரிக்கவில்லை. ஒரு தேசியக் கொடி, ஒரே தேசியகீதம் மற்றும் ஒற்றையாட்சிக்குள் அனைத்து இன மக்களும் இன, மத பேதமின்றி சமமாக வாழக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும். பொலிஸ், காணி அதிகாரங்கள் எவருக்கும் பகிரப்படமாட்டாது. ஒரே நாடு, ஒரே சட்டம் என்ற அடிப்படையிலேயே எமது செயற்பாடு அமையும். எமது அணி இனவாத அணி கிடையாது, தேசியவாத அணியாகும். சிலவேளைரணில்விக்கிரமசிங்கவை ஆதரித்திருந்தால், தேர்தலின் பின்னர் பொலிஸ், காணி அதிகாரங்களை அவர் வழங்கிவிட்டால் நாம் என்ன செய்வது?" - என்றார். (அ-ச-44)

## கேரளக்...

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த 39 மற்றும் 44 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட கஞ்சாப் பொதிகளின் பெறுமதி சுமார் 42 மில்லியன் ரூபா என பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ-ம-20-26)

## ரயில்...

இனந்தெரியாத குழுவொன்று டீசல் திருட்டில் ஈடுபட்டுள்ளது. ரயில் நிலையத்தில் கண்காணிப்பில் ஈடுபட்ட அதிகாரிகள் திருட்டு இடம்பெறுவதை அவதானித்தபோது, சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளனர். 20 லீற்றர் கொள்கலன்கள் நான்கில் டீசல் எடுக்கப்பட்ட நிலையில், அவை மீட்கப்பட்டு இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ரயில்களின் எரிபொருள் தாங்கியின் திறப்புகள் அநுராதபுரத்திலேயே இருப்பதாகக் கூறப்படும் நிலையில், குறித்த திருட்டுக்கு ரயில் நிலைய ஊழியர்களும் உடந்தையாகச் செயற்பட்டார்களா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறை பொலிஸாரும், ரயில் திணைக்களத்தினரும் தனித்தனியே விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-ம-20-26)

## தமிழ்க்...

உள்ளதாவது:-

தென்னிலங்கையின் பழம்பெரும் கட்சிகளின் சின்னங்களான யானையும், கையும் தற்போதைய ஜனாதிபதித் தேர்தலில் காணாமற்போயுள்ளன. அது போன்று தமிழர் பரப்பிலும் சின்னங்கள் காணாமற்போகும் நிலை விரைவில் வரலாம். தூயதமிழ் தேசியவாதிகளும், இளையோரும் புதிய அரசியல் கூட்டமைப்பாக உருவெடுக்கவேண்டும். அதனைக் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட மூதவை வழிநடத்த வேண்டும். தமிழர்கள் புதிய செல்நெறியில் தமது அரசியல் பாதையை முன்கொண்டு செல்லவேண்டும் என்பதைத் தற்போதைய நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. தமிழ்ப் பொது வேட்பாளர் களத்தை எம்மினம் சரியாகப் புரிந்துகொள்ள உச்ச பட்சப் பரப்புரைகளை எல்லாத் தளங்களிலும் முன்னெடுப்போம். எதிர்கால வரலாறு நிச்சயம் சுயநலங்களை கடந்து குறும் கட்சி அடையாளங்களைத் துறந்து, தமிழ்த் தேசிய திரட்சிக்காக அர்ப்பணித்த மனிதர்களை நிலைநிறுத்தும் என்பதில் ஐயமில்லை - என்றுள்ளது. (அ-ம-66)

## காங்கேசன்...

தாமதம் ஏற்பட்டுள்ளது. இதற்கு முன்னர் பல தடவைகள் தடைப்பட்ட மேற்படி கப்பற்சேவையானது எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் மீள ஆரம்பிக்கப்படும் என்றும் பயண முன்பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையிலேயே, ஆசன முன்பதிவுகளை மேற்கொள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இணையத்தளத்தில் குறித்த கப்பற்சேவை காலவரையறை இன்றி மீண்டும் தாமதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ-ம-66)

## தமிழர்...

நுவரெலியாவில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனாதிபதி ரணில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். எனவே அதனை மாற்றி வேறுபாதையில் பயணிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. மலையகத் தமிழ் மக்களுக்கு சமூக நீதியை நிலைநாட்டுவதற்காக அடுத்த வருடம் மாநாடு ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளேன். அத்துடன் அரசாங்கத்தால் உருவாக்கப்படவுள்ள சமூகநீதி ஆணைக்குழுவில் தமிழ் மக்களின் சமூகப் பிரச்சினைகளை விரிவாக ஆராய சந்தர்ப்பம் கிடைக்கும் - என்றார். (அ-ம-ச)

## நீதி...

கீழ் கொண்டுவரப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே, அலி சப்ரி தற்போது நீதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அலி சப்ரி தற்போது வெளிவிவகார அமைச்சராகப் பதவி வகித்துவரும் நிலையில், அந்தப் பதவிக்கு மேலதிகமாகவே நீதி அமைச்சராகவும் அவர் நியமிக்கப்பட்டுள்ளார். கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்திலும் அலி சப்ரி நீதி அமைச்சராகச் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ச-44)

## 32 வேட்பாளர்கள்...


ஒரு வேட்பாளரும், சுயேச்சை வேட்பாளராக 15 பேரும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ-ம)

**வீடு வாடகைக்கு**

நாவற்குளி - பூநகரி வீதியில்
கோவிலாக்கண்டி பிரதேசத்தில்
3 அறைகள் இணைந்த
குளியல் அறையுடன் கூடிய
வீடு வாடகைக்கு உண்டு.
முற்பணம் - 100000/-
மாதவாடகை - 5000/-
தொடர்புகளுக்கு:-
**077 718 4901**
(CS/55919) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழியனுப்பிட வாரீர்!




## திரு. தம்பிப்பிள்ளை வரதராஜா (B.Ed)

(அதிபர் - The Express Institute)

யாழ்/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் (1975 - 1982)
யாழ்/பலாலி ஆசிரியர் கலாசாலை (1982 - 1983)
யாழ்/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் (1984 - 1988)
யாழ்/நீர்வேலி றோ.க.த.க. வித்தியாலயம் (1989 - 1993)
யாழ்/மத்திய கல்லூரி (1993 - இளைப்பாறும்வரை)

**விடை எழுதவைத்த ஆசானுக்கு;
விடை கொடுக்கும் நேரமிது.**

இடம் : The Express Institute வளாகம்
காலம்: இன்று செவ்வாய்க்கிழமை ( 13.08.2024 )
நேரம்: பி.ப 01.00

தசாப்தங்கள் பலவாய் தன்பணியைச் செவ்வனவே ஆற்றிய ஆசானின் முன்னைநாள் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அவர்பால் அன்பு கொண்டுள்ள அனைத்து உள்ளங்களையும் நிறுவனமுன்றிலில் ஒன்று கூடி, அன்னாரது புகழுடலை பேரணியாய் அழைத்துச் செல்வோம் வாரீர் !

The Express Institute
Irupalai Junction, Kopay.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.08. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.